வரைவு

அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை

இல: 5/97(1)

எனது இல எக்ஸ்ரியூ 21(111) 7

அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள்

பெருந்தோட்டக், கைத்தொழில் அமைச்சு

சுதந்திர சதுக்கம்

கொழும்பு-07

1997.0 . 01 ஆந் திகதி

எல்லாச் செயலாளர்களுக்கும்

திணைக்களத் தலைவர்களுக்கும்!

## அரச உத்தியோகத்தர்களுக்கான காப்புறுதி முறையொன்றை ஏற்படுத்தல் (அக்ரஹார)

மேற்படி விடயம் தொடர்பான 1997-01-31 ஆந் தேதிய 05/97 ஆம் இலக்க சுற்றறிக்கை மீது உங்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

02. இக் சுற்றறிக்கையின் நடவடிக்கைகளை செயற்படுத்துகையில் அதிகமான அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் சுற்றறிக்கையின் மதியுரைகளை துரிதமாக நடைமுறைப்படுத்துவதற்குரிய ஒழுங்குகளைச் செய்யவில்லையென்பது எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இதனால் அரச உத்தியோகத்தர்களுக்கு தமக்குக் கிடைக்க வேண்டிய காப்புறுதி நலன்களை பெறுகையில் அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டி உள்ளது.

03. இந்நிலைமைத் தவிர்த்துக் கொள்ளுவதற்காக உடனடி நடவடிக்கை எடுத்து மிக விரைவில் இதனை முடித்துவிடுவதற்காக நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்காக பின்வரும் மதியுரைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

I. சுற்றறிக்கையின் இணைப்பு 04 இன்படி இதுவரை விண்ணப்பங்கள் வழங்கப்படாத உத்தியோகத்தர்களுக்கு அவர்களுக்கு வேண்டிய மொழியில் விண்ணப்பங்களை வழங்கல்.

II. கிடைக்கப்பெற்றுள்ள விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட சுற்றறிக்கையின் 05 ஆம் 08 ஆம் பந்திகளில் குறிப்பிட்டுள்ள மதியுரைகளின் படி உடனடியாக காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துக்கு முன்னளித்தல்.

III. இதுவரை விண்ணப்பங்களை அனுப்பி காப்புறுதிப் பத்திரங்கள் கிடைக்கப் பெறாவிடின் அதை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்து தாமதமின்றி பெறுவதற்குரிய நடவடிக்கை எடுத்தல்

IV. உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள நலன் பெறும் விபரக் கொத்துகளை தாமதமின்றி உத்தியோகத்தர்களுக்கு வழங்கல்.

V உங்களுக்கு கிடைக்கப்பெற்றுள்ள நலன்பெறும் விண்ணப்பங்களை சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தியின் குறிப்பிட்டுள்ள மதியுரைகளின் படி காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் பிரதேசக்கிளை அலுவலகங்களுக்கு உடனடியாகச் சமர்ப்பித்தல்.

VI தனது அமைச்சில்/திணைக்களத்திலுள்ள எல்லா உத்தியோகத்தர்களுக்குமாக பகுதியாக அல்லது ஒரே முறையில் காப்புறுதிப் பத்திரங்களை பெறுவதற்குரிய நடவடிக்கை எடுத்தல்.

04. இக்காப்புறுதி முறையை செயற்படுத்தும் போது பின்வரும் விடயங்களையும் கவனத்திற் கொள்ள வேண்டும்.

1. சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ளவாறு அங்கத்தவரொவருக்கு 18 வயது தொடக்கம் 60 வயது வரை விதிக்கப்பட்டுள்ள வயதெல்லை வாழ்க்கைத் துணைவருக்கும் ஏற்புடையனவாகும்.

ii. அரசாங்க மாகாண அரசாங்க சேவைக்குள் வருகின்ற அனைத்துச் சேவைகளிலுமுள்ள நிரந்தர ஓய்வூதிய உரித்துடைய பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களும் இக்காப்புறுதி முறையில் உள்ளடங்குவர்.

iii. இக்காப்புறுதி முறையின் கீழான நலன்கள்யாவும் 1997.01.01 ஆந் திகதி தொடக்கம் கிடைப்பதற்கு உரித்துண்டு. அதன் பிரகாரம் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தால் அன்று தொடக்கம் எல்லாக் கொடுப்பனவுகளும் செய்யப்படும்.

iv. அரச உத்தியோகத்தர்கள் இருவர் விவாகமாகி இருப்பின் அவர்கள் இருவருக்குமாக காப்புறுதித் தவணைக்கட்டணம் செலுத்தப்படுவதால் அவ்விருவரும் காப்புறுதி நலன்களை பெறுவதற்கு உரித்துடையவர்களாவர்.

(அதாவது ஒருவருக்கு ஆகக்கூடிய 50,000/- ரூபாக்கு வரையறுக்கப்பட்டு இருவருக்கும் 1,00000/- ரூபா நலனளிக்கப்படும்.)

v. காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் கடன்பாதுகாவல் காப்புறுதிப் பத்திரம் சொத்துக் கடன்களுக்காக தற்போது நடைமுறைப்படுகிறது.

vi. அரசினால் பதிவுசெய்யப்பட்ட ஆயுள்வேத மருத்துவசாலைகளில் தங்கியிருந்து சிகிச்சை பெறுகின்ற நோயாளிகளுக்கு கொடுப்பனவுகள் செய்யப்படும்.

ஒப்பம்/ஆர்.எஸ் ஜயரட்ன.
செயலாளர்.
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்
பெருந்தோட்டக்,கைத்தொழில் அமைச்சு.